
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1187

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## திராவிட மாடல் அரசு

நீரை.மகேந்திரன்

169

`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நம் முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...

# செப்டம்பர் 17 சமூக நீதி நாள்

# தமிழ்நாட்டின் பகுத்தறிவுப் பயணம் தொடரும்...

சமூக நீதி என்பது கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் முன்னுரிமையாய்ப் பெறுகிற இட ஒதுக்கீடு மட்டுமல்ல. இது சமத்துவத்தை வென்றெடுக்கும் ஜனநாயக வழியிலான அறப்போருக்குரிய கருத்தியல் ஆயுதம். அந்த இலக்கில் சமரசமின்றி, இறுதிவரை சமர் புரிந்தவர் தந்தை பெரியார் என்பதை அறிவுலகம் அறியும். தமிழ்நாடு உணரும்.

சுயமரியாதை, பகுத்தறிவு, சமதர்மம், சமூகநீதி, இன உரிமை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட தமிழ்நாட்டை உருவாக்கியது தந்தை பெரியார்தான். அவர்தான் கடந்த நூற்றாண்டில் தமிழ் சமூகத்தின் வளர்ச்சிக்கு அடித்தளமிட்டவர். எதிர்காலத்துக்குப் பாதை அமைத்துத் தந்தவர்.

அவரை, சமூகநீதி மற்றும் சமத்துவத்திற்கான அடையாளமாக நிலைப்படுத்தியதில் ஆட்சியிலும், அரசியல் களத்திலும் திராவிட முன்னேற்றக் கழகம் முன்னணி பங்கு வகித்துள்ளது. அந்த வகையில், "பெரியார் என்றால் சமூக நீதி, சமூக நீதி என்றால் பெரியார்'' எனக் காலகாலத்துக்கும் அடையாளப்படுத்தும் வகையில், திராவிட மாடல் அரசின் அறிவிப்புதான், "செப்டம்பர் 17, தந்தை பெரியாரின் பிறந்த நாள் சமூகநீதி நாள்" என்கிற அறிவிப்பு.

பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாக முத்தமிழறிஞர் கலைஞர் அறிவித்ததைப்போல, அண்ணல் அம்பேத்கரின் பிறந்த நாளை சமத்துவத்துக்கான நாளாகவும், தந்தை பெரியாரின் பிறந்த நாளை சமூக நீதி நாளாகவும் அறிவித்து திராவிட மாடல் அரசு, சமூக சமத்துவத்துக்கான அரசு என அறிவித்துக் கொண்டது.

### இந்த ஆட்சியே பெரியாருக்கு காணிக்கை

திராவிட முன்னேற்றக் கழகம் முதன் முறையாக 1967-ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தபோது, 'இந்த ஆட்சியே தந்தை பெரியாருக்குக் காணிக்கை' என்று அறிவித்தார் பேரறிஞர் அண்ணா. 2021-ஆம் ஆண்டில் தி.மு.கழகம் ஆறாவது முறையாக ஆட்சிக்கு வந்தபோது, அந்தப் பகுத்தறிவுப் பகலவனின் அறிவுச்சுடரைப் போற்றும்விதமாக, வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த அறிவிப்பினை சட்ட மன்றத்தில் விதி எண் 110-ன்கீழ் அறிவித்தார் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

இது உலகில் எந்த சீர்திருத்த இயக்கத்துக்கும், சீர்திருத்தவாதிக்கும் கிடைக்காத புகழ் தந்தை பெரியாருக்குக் கிடைத்தது என அன்று குறிப்பிட்டுப் பேசினார் முதலமைச்சர் அவர்கள்.

"சீர்திருத்தவாதிகள் பேசிவிட்டுப் போயிருப்பார்கள்; ஆட்சியாளர்களுக்கு அதன் வாசனையே இருக்காது. தமிழ்நாட்டில் மட்டும்தான் ஒரு சீர்திருத்த இயக்கம், அரசியல் இயக்கமாக மாறி, அந்த இயக்கம் சீர்திருத்தக் கருத்துகளை நடைமுறைப்படுத்தி, சட்டமாகவும் ஆக்கி அந்தச் சமுதாயத்தை மேன்மை அடைய வைத்திருக்கிறது. அவரால் கல்வி பெற்றவர்கள், அவரால் வேலைவாய்ப்பைப் பெற்றவர்கள், அவரால் அதிகாரத்தைப் பெற்றவர்கள், அவரால் பெண்ணினம் அடைந்த வளர்ச்சிகள், ஒடுக்கப்பட்ட மக்கள் அடைந்த எழுச்சிகள் ஆகியவற்றுக்கு இன்றைய தமிழ்நாடே சாட்சி. இந்த விதை தந்தை பெரியார் போட்ட விதை'' என அவரது உரை திராவிட இயக்கத்தை வழிநடத்திக் கொண்டிருப்பவரின் முழக்கமாகவே இருந்தது.

"பெரியாரின் கருத்துகளுக்கு பேரறிஞர் அண்ணா எருவூட்டினார்; முத்தமிழறிஞர் கலைஞர் நீரூற்றி வளர்த்தார். அதனை மாபெரும் விருட்சமாகக் காப்பாற்ற வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது" என்றவர்,

பெரியார் ஊட்டிய உணர்வை, உணர்ச்சியை, எழுச்சியை, சிந்தனையை விதைக்கும் அடையாளமாக, அறிவாசான் தந்தை பெரியார் பிறந்த செப்டம்பர் 17-ஆம் நாளை ஆண்டுதோறும் 'சமூகநீதி நாள்' ஆகக் கொண்டாடுவது என்று தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது.

தந்தை பெரியாரின் அறிவு வெளிச்சத்தில் வளர்ந்த நாம், நமது நன்றியின் அடையாளமாக அந்த நாளைக் கொண்டாடுவோம்; சாதிய ஏற்றத் தாழ்வுகள், தீண்டாமைக் கொடுமைகளை, மத வேறுபாடுகளை உதறித் தள்ளுவோம்; பெண்களைச் சமநிலையில் மதிப்போம். ஆண்டுதோறும் செப்டம்பர் 17-ஆம் நாளன்று தலைமைச் செயலகம் தொடங்கி, அனைத்து அரசு அலுவலகங்களிலும் சமூகநீதி உறுதி மொழியை அனைவரும் எடுத்துக் கொள்வோம்" என அறிவித்தார்.

அதையடுத்து, 2021-ஆம் ஆண்டிலிருந்து, செப்டம்பர் 17 அன்று தமிழ்நாடு அரசு சார்பில், சமூகநீதி நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முழுவதும் பள்ளி, கல்லூரிகள் தொடங்கி அரசு அலுவலகங்கள் வரை சாதிய ஏற்றத்தாழ்வுக்கு எதிரான, சமத்துவத்துக்கான உறுதிமொழியினை ஏற்க வைத்துள்ளது தமிழ்நாடு அரசு. ஏற்க வைத்துள்ளார் நம் முதலமைச்சர்.

தந்தை பெரியார் மறைந்தபோது, 'தந்தை பெரியார் தனது சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டார், நாம் தொடர்வோம்' என்றார் அன்றைய முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். கலைஞருக்குப் பின்னர் அந்த பகுத்தறிவுச் சுடருடன் பயணம் தொடர்ந்து கொண்டிருக்கிறார் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். அந்தப் பயணம் தொடரட்டும். தொடரும்... திராவிட மாடல் அரசு 2.0 ஆட்சியாகத் தொடரும்.

...சாதனை தொடரும்









### செப் 17 - சமூக நீதி நாள் உறுதிமொழி!

" 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற அன்புநெறியையும் - 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பண்புநெறியையும் எனது வாழ்வியல் வழிமுறையாகக் கடைப்பிடிப்பேன்! சுயமரியாதை ஆளுமைத் திறனும் - பகுத்தறிவுக் கூர்மைப் பார்வையும் கொண்டதாக என்னுடைய செயல்பாடுகள் அமையும்!

சமத்துவம், சகோதரத்துவம், சமதர்மம் ஆகிய கொள்கைகளுக்காக என்னை நான் ஒப்படைத்துக் கொள்வேன்! மானுடப் பற்றும் மனிதாபிமானமும் ஒன்றே எனது இரத்த ஓட்டமாக அமையும்! சமூகநீதியையே அடித்தளமாகக் கொண்ட சமுதாயம் அமைக்கும் எனது பயணம் தொடர, இந்த நாளில் உறுதியேற்கிறேன்!"

> பள்ளி, கல்லூரிகள் தொடங்கி அரசு அலுவலகங்கள் வரை சாதிய ஏற்றத்தாழ்வுக்கு எதிரான, சமத்துவத்துக்கான உறுதிமொழியினை ஏற்க வைத்துள்ளது தமிழ்நாடு அரசு.

## இயக்கப்படும் நாடகம் எடுபடாது!

'தேர்தலுக்குப் பின், எல்லாமே யாராலோ இயக்கப்பட்டு, ஒரு நாடகத்தை நடத்துவதைப்போல் தெரிகிறது. அதனால், தி.மு.க. கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டும்' என சமூக வலைதளங்களில் பலரும் எழுதி வருகின்றனர்.

அதேநேரத்தில், தி.மு.க. எதற்கும் கவலைப்படத் தேவை இல்லை. வெல்லப்போவது தி.மு.க.தான். ஆனால், முதலமைச்சர் அவர்கள் தனிப்பட்ட முறையில், ஒரு கட்சித் தலைவராக சில உத்தரவுகளைப் போட்டால் நல்லது.

எப்போதும் தொடர்வதுதான். ஆனால், இப்பொழுது அதிக கவனம் தேவை எனக் குறிப்பிட்டுள்ளார் முகநூல் பதிவர் கிரி சுந்தர். அவரது பதிவிலிருந்து...

"வாக்கு எண்ணிக்கை மையத்தில் இருக்கப்போகும்,தி.மு.க. பூத் ஏஜென்ட்டுகள் ஒவ்வொரு பூத்திலும், ஈ.வி.எம்.மில் காட்டப்படும் மொத்த ஓட்டுகளை தேர்தல் நாளில் பதிவான வாக்குகளுடன் சரி பார்க்க வேண்டும். ஏதாவது மாற்றம் இருந்தால், அவற்றை எண்ணுவதற்கு, எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும்.

அதேபோல், ஒவ்வொரு ஈ.வி.எம்.மிலும் வெவ்வேறு கட்சிகளுக்குப் பதிவான வாக்குகளின் கூட்டுத்தொகை 'மொத்தம் பதிவான வாக்குகளுக்கு' சமமாக இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும். இதெல்லாம், மகாராஷ்டிரா, பீகார் சட்டப்பேரவை தேர்தல்களில் பிரச்சினையாக வந்தன.

பா.ஜ.க. ஏதாவது ஒரு அஸ்திரத்தை உபயோகித்து, தி.மு.க.வை வீழ்த்தலாமா என்று பார்க்கிறது. தி.மு.க. அதற்கு கடைசிவரை இடம் கொடுக்காமல் கவனமாக இருப்பது நல்லது.

'எக்ஸிட் போல்' முடிவு வருவதற்கு முன்பே, அதைத் தெரிந்துகொண்டு மோடி, தி.மு.க. மீது உத்தரப்பிரதேசத்தில் பொய் குற்றச்சாட்டை கூறியுள்ளார்" என்கிறது அவரது குறிப்பு.

தி.மு.க. வாக்கு எண்ணிக்கை முகவர்கள், மிகவும் கவனமுடன் இருக்க வேண்டும் எனக் கழகத் தலைவர் வழிகாட்டல் கொடுத்துள்ளார். அதன்படி வெற்றியை சாத்தியமாக்கிய களப்பணியாளர்களுக்கு இன்று நன்றி சொல்லும் நாளாக இருக்கும்!

## ஃப்ளாஷ்பேக்



'மெடிக்கல்' எஸ்.சங்கர்



### ஆப்பக்கூடல் ஆபத்தில் தலைவருடன்...

1967-ஆம் ஆண்டு, ஈரோடு ஆப்பக்கூடல் - மேவாணி கிராமத்தில், கழகத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையேற்க, கழக முன்னோடி அண்ணன் என்.கே.கே.பெரியசாமி அவர்கள் ஏற்பாட்டில், கழகப் பொதுக்கூட்டம் மாநாடுபோல நடைபெற்றது. அந்தப் பொதுக்கூட்டத்தின்போது பலத்த காற்றுவீசி, பந்தல் சரிந்து விபத்து ஏற்பட்டது. பொதுக்கூட்டத்துக்கு வந்தவர்கள், நாலாபக்கமும் ஓடிய நிலையில், கலைஞரை அண்ணன் மு.சின்னசாமி அவர்கள் தூக்கிக் கொண்டு பந்தலுக்கு வெளியே ஓடினார். அப்போது, என்னுடைய தந்தை, மேவாணி பள்ளியில் தலைமை ஆசிரியராக இருந்த சர்க்கரை அவர்களும் தலைவரைக் காப்பாற்றிக்கொண்டு ஓடியதாகக் குறிப்பிட்டுள்ளார். நிகழ்வுக்கு வந்த கலைஞருடன், என் தந்தை உள்ளிட்ட கழகத்தினர் எடுத்துக்கொண்ட படம்.

- 'மெடிக்கல்' எஸ்.சங்கர்,
57-வது வார்டு செயலாளர்,
ஈரோடு மாநகரம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### குடியிருப்பு மனைச் சட்டம்!

1971-ஆம் ஆண்டில், கழக ஆட்சியில்தான் இந்தியாவிலேயே முதன்முறையாக குடியிருப்பு மனைச் சட்டத்தினை கொண்டு வந்தார் கலைஞர். மிராசுதார் நிலங்களில் வீடு கட்டி, குடியிருந்த ஒரு லட்சத்து 75 ஆயிரம் விவசாயத் தொழிலாளர்களுக்கு அந்த வீடுகள் சொந்தமாக்கப்பட்டன. அதில் தாழ்த்தப்பட்டோர் மட்டும் ஒரு இலட்சம் பேர்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900